மலேசியத் தமிழ் ஆய்விதழ்
Malaysian Journal of Tamil
eISSN: 2990-9694

# சங்கப்பாக்களில் தொல்தமிழரின் திருமண முறைகள்

## Caṅkappākkaḷil Toltamiḻariṉ Tirumaṇa Muṟaikaḷ

து. ஜானகி/ T. Janaki[1]
[1]உதவிப் பேராசிரியர், முனைவர், அயல்நாட்டுத் தமிழர் புலம்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை
Corresponding Email: drjanakiiits@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

சங்க இலக்கிய மரபுச் செய்யுட்கள் அனைத்தும் தொல் தமிழரின் வாழ்வியலை மிக ஆழமாக விவரிக்கின்றன. தமிழர் வாழ்வியல் அறத்துடன் கூடிய காதலும் வீரமும் நிறைந்ததாகும். காதல் கொண்ட களவு வாழ்க்கையைக் கற்பு வாழ்க்கையாக மாற்றத் திருமணம் என்னும் சடங்கை நிகழ்த்தினர். திருமணம் பெற்றோர் ஒப்புதலுடனும் பெற்றோர் ஒப்புதல் இன்றியும் நடந்தன. அதேபோல் பெண்ணிற்கு ஆண் பொருள் கொடுத்துத் திருமணம் செய்துகொண்ட மரபும் இருந்திருக்கிறது என்னும் பதிவுகள் இலக்கியங்களில் உண்டு. நல் நேரம் காலம் பார்த்துத் திருமணத்தை நடத்தினர். திருமணத்தில் பந்தல் அமைத்தல், ஊர் முதுபெண்டிர் கூடி நீராட்டுதல், உணவு வழங்குதல், ஊரார் தலைவன் தலைவியை வாழ்த்துதல் போன்ற பல்வேறு சடங்குமுறைகள் நிகழ்த்தப்பட்டன. இவ்வாறு தமிழர் தம் மொழிக்கு மட்டுமின்றி மரபு மீறாமல் வாழும் தம் வாழ்க்கைக்கும் இலக்கணம் வகுத்தனர்.

**கருச்சொற்கள்:** அகம் - களவு, கற்பு, தொல் தமிழர் திருமண முறைகள், வகைகள், சடங்குகள்

**Abstract**

All Cangam Literature Traditional poems are describing the life of ancient Tamils in great depth. Tamils' life virtue is full of romantic and heroism. They performed the ritual of marriage to change the life of love into a life of chastity. Marriages took place with and without parental consent. There is also a tradition in the literature where a man gives a woman a gift and gets married. They got married at the right time and space. Various rituals were performed at the wedding, such as setting up a Pandal, bathing to bride the village mudupendir, offering food, greeting the bride by the village leaders. In this way, the Tamils created the grammar not only for the language but also for the life Style they lead without breaking the traditions.

**Keywords:** Tamils Marriage, Types, Times and space and Rituals

## முன்னுரை

சங்ககாலச் செய்யுள்கள் அனைத்துமே வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா என்னும் பாக்களால் ஆன மரபுக் கவிதைகளாகும். இக்கவிதைகள்/ செய்யுட்கள் அனைத்தும் தொல்தமிழர் வாழ்வியலை விளக்குவதாகும். தமிழ்ச்சமூகத்தின் இரு கண்களாகக் கருதப்படும் அகம், புறம் என்னும் கருத்துக்களையே மையமாகக் கொண்டு பல சங்கப் புலவர்களால் பாக்கள்/ செய்யுட்கள் இயற்றப்பட்டிருக்கின்றன. இப்பாக்கள்/ செய்யுட்கள் அனைத்தும் அறம் சார்ந்த வாழ்வியலை மையமாகக் கொண்டு இயற்றப்பட்டவை என்பது புலனாகிறது. புலவர்கள் அக வாழ்க்கையைக் களவு, கற்பு என இரு பிரிவாகப் பிரித்துப் பாக்கள் புனைந்துள்ளனர். களவு வாழ்வில் திளைத்த தலைவன் தலைவி இருவரும் சேர்ந்து இல்லறம் என்னும் கற்பு வாழ்க்கைக்குச் செல்ல இருவீட்டார் சம்மதத்துடன் திருமணம் என்னும் நிகழ்வு நடைபெற்றுள்ளது.

திருமணம் என்பது இருவர் இணையும் வாழ்க்கையை முறைப்படுத்தும் முறை என்பதை விட இருவர் வாழ்க்கை இணைப்புக்கு உலகம் உடன்படும் முறை என்பதே பொருந்தும் என்கிறார் மு. வரதராசன்.

## திருமணத் தோற்றம்

பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர் கரணம் என்ப
(தொல்.1091)

என்னும் நூற்பா தமிழ்ச் சமூகத்தில் திருமணம் என்னும் கருத்தாக்கம் நிகழ்ந்ததற்குரிய காரணத்தைக் குறிப்பிடுகிறார். வரைதல், கரணம் என்னும் சொற்கள் திருமணம் என்னும் சொற்களுக்கு இணைச் சொற்களாகக் கருதப்படுகின்றன. இவ்வாறு தமிழர்கள் தொன்மைக்காலத்திலேயே பெற்றோர் மற்றும் உறவினர் ஒப்புதலுடன் ஒரு முறையான இல்வாழ்க்கையினை வாழ்ந்திருக்கின்றனர் என்பதனை விளக்கிக் கூறுவது இக்கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது.

## திருமண நாள், நேரம் குறித்தல்

மனித வாழ்வின் வளமைக் குறியீடாக விளங்கும் திருமணச் சடங்கு நன்நாளில் நிகழ்ந்திட வேண்டும் என்னும் எண்ணம் பழந்தமிழர்களிடம் இருந்ததைப் பல சங்கப் பாக்கள் உணர்த்துகின்றன.

களையிரு ளகன்ற கவின் பெறு காலைக்
கோள்கா நீங்கிய கொடுவெண் டிங்கள்
கேடில் விழுப்புகழ் நாடலை வந்தென (அகம். 86.5-7)

புள்ளுப்புணர்ந் தினிய வாகத் தெள்ளொளி
அங்கண் இருவிசும்பு விளங்கத் திங்கள்
சகடமண்டிய துகள் தீர் கூட்டத்துக் (அகம். 136.3-5)

என்னும் பாடலடிகள் வாயிலாகத் திங்களாகிய சந்திரன் தன் துணையாகிய ரோகிணி என்னும் விண்மீனைக் கூடிச் சேர்ந்த நல்ல காலை திருமணத்திற்கு உகந்த காலமாகக் கருதப்பட்டமை அறிய முடிகின்றது. இரவிலும் அதிகாலையிலும் திருமணம் நடந்துள்ளது. இதனை மங்கல ஓரை என சோதிடக் குறிப்புகள் கூறுகின்றன.

**திருமண நீராட்டுச் சடங்கு**

மணம் செய்வதற்கு முன்பாக மணத்திற்குரிய பெண்ணை மங்கல நீராட்டுவது வழக்கமாகும். இவ்வழக்கம் பண்டையக் காலம்தொட்டே இருந்து வருவது அறியமுடிகின்றது.

வதுவை மண்ணிய மகளிர் விதுப்புற்று
.......... வாலிழை மகளிர் நால்வர் கூடிக்
கற்பினின் வழாஅ
நீர்ரொடு சொரிந்த ஈரிதழ் அலரி
பல்லிருங் கதுப்பி நெல்லொடு தயங்க (அகம்.136.8-9)

**திருமணப் பந்தல் அலங்காரம்**

தொல்காப்பியர் கூற்றை மெய்பிக்கும் வண்ணம் தமிழர் திருமணச் சடங்குகளை அகநாநூற்றுப் பாடல்கள் விளக்குகின்றன. வரிசையாய்க் கால்களை உடைய குளிந்த பெரிய பந்தரின் கீழ் மணல் பந்தலைச் சுற்றிலும் பரப்பப்பட்டிருந்தது. பந்தலைச் சுற்றிலும் மலர்மாலைகள் தொங்கவிடப்பட்டிருந்தன. மனை விளக்கு எரிந்துகொண்டிருந்தது.

.......... நிரை கால்
தண்பெர்ம் பந்தர்த் தருமணல் ஞெமிரி
மனை விளக்குறுத்து மாலை தொடரி (அகம். 86.2-4) என்றும்

................. நின்னை அகன்கண்
வரைப்பின் மணல்தாழப் பெய்து திரைப்பில்
வதுவையும் ஈங்கே அயர்ப அதுவேயாம் என்றும்
அல்கலுஞ் சூழ்ந்த வினை (கலி.115.18-21)

எனச் சங்கப்பாக்கள் பந்தல் அலங்கார பற்றிக் கூறுகின்றன.

**திருமணச் சடங்கில் தாலி (இழையணி)**

மானிடவியல் நோக்கில் திருமணம் என்ற சடங்கின் பொருட்டு நிலைமாற்றுத் தன்மையைப் புலப்படுத்துவது தாலி கட்டும் சடங்கு ஆகும். இச்சடங்கு திருமணம் ஆன பெண்ணிற்கும்

திருமணம் ஆகாப் பெண்ணிற்கும் ஓர் அடையாளக் குறியீடாக இன்றும் அமைகிறது. இச்சடங்கு இயல்பு நிலையில் இருக்கும் பெண்ணை மீவியல்பு நிலையில் அடையாளப்படுத்துகிறது. இதனை மானிடவியல் * அறிஞர் விக்டர்டர்னரின் கோட்பாடு காட்டுகிறது. மேலும், இதனை வான்கென்ன **நிலைமாற்றம்** என்று குறிப்பிடுவர். தாலிகட்டும் சடங்கு என்பது திருமணச் சடங்கில் ஒரு குறியீடு சார்ந்த கருத்தியலை முன்வைக்கிறது. இச்சடங்கு குறித்து சங்க இலக்கியத்தில் இல்லை என்று ஒருசில ஆய்வறிஞர் மொழிவர்.

மழைப்பட் டன்ன மணன்மலி பந்தர்
இழையணி சிறப்பின் பெயர்வியர்ப்பு ஆற்றி (அகம்.136:16-17)

சென்னைப் பல்கலைக்கழக பேரகராதியில் இழையணி பொருள்:

இழையணி – "இழை, நூல்,நூலிழை,ஆபரணம்,மாதரணிவடம்"

எனக்கூறுகிறது.

தமிழ்-தமிழ் அகராதி:

இழையணி – "துகிழ், ஆபரணம்,நேரிழை,முற்றிழை,நூலிழை"

எனக்கூறுகிறது.

**மணமுழவுச் சடங்கு**

தற்போதைய திருமணச் சடங்குகள் தாலிகட்டும் நிகழ்வு நடக்கையில் மணமுழவு இயக்குவதென்பது சமூகத்தில் மரபாக இருந்து வருகிறது. இச்செயல் தொடக்ககாலச் சமூகத்திலிருந்தே நிலவி வருகிறதென்பதைச் சங்க இலக்கியம் முன் வைக்கிறது. *பறைப்படப் பணிலம் ஆர்ப்ப இறைகொள்பு (குறுந்.15:1)* என்ற பாடல்வழி திருமணத்தின் போது பறையும், சங்கும் இயக்கப்பட்டமையை கூறுகிறது. மணவினையின் பொருட்டு வழிபாடு நிகழ்த்தப்பட்டு மங்கலமுரசு (முழவு) ஒலித்தமையை, *கடிநகர் புனைந்து கடவுட் பேணிப் படுமண முழவொடு பருஊப்பணை இமிழ (அகம்.136:6-7)* என்னும் பாடல் வரிகள் விளக்குகின்றன.

**உணவு முறைகள்**

உளுத்தம் பருப்புடன் கூட்டிச் சமைத்த பொங்கலோடு விருந்து நடைபெற்றுக் கொண்டிருந்தது.

உழுந்து தலைப்பெய்த கொழுங் களி மிதவை
பெருஞ் சோற்று அமலை நிற்ப
(அகநா.86)

இறைச்சியுடன் கூட்டியாக்கிய நெய் மிகுந்த வெண்சோற்றைத் திருமணத்திற்கு வந்தவர்கள் உண்டனர் என அகநானூறு

மைப்பு அறப் புழுக்கின் நெய்க் கனி வெண்சோறு

(அகநா.136)

என விளக்குகிறது.

**திருமணச் சடங்கு முறைகள்**

சந்திரனை உரோகினி கூடிய நல்லோரையில் முதிய மங்கல மகளீர் மணமகளை நீராட்டுதற்குரிய நீரை முகந்து தர, மக்களைப் பெற்ற மங்கல மகளீர் நால்வர் கூடிநின்று "கற்பினின்றும் வழுவாது நன்றாய பல பேறுகளை யும் தந்து நின்னை எய்திய கணவனை விரும்பிப் பேணும் விருப்பத்தை உடையை ஆகுக" என்று வாழ்த்தி, அந்நீரில் நெல்லையும் மஞ்சளையும் கலந்து மணமகளை நீராட்டினர் (அகநா.86).

திங்கள் உரோகினியுடன் கூடிய நல்லோரையில் மணமனை அழகு செய்யப்பட்டது. கடவுள் வழிபாடு நடைபெற்றது. மண முழவுடன் பெரிய முரசம் ஒலித்தது. வாழ்வரசிகள் மணமகளுக்கு மணநீராட்டினர். அடுத்ததாக, வாகை இலையை அருகின் கழங்கிடத்துள்ள அரும்புடன் சேரக் கட்டிய வெள்ளிய நூலைச் சூட்டி மணமக்களைத் தூய உடையால் பொலியச் செய்தனர்.

இங்ஙனம் மங்கல மகளிர் மணமகளை நீராட்டுவது அக்காலத்தில் மிகச் சிறந்த சடங்காகக் கருதப்பட்டது. பிற திருமணச் சடங்கு முறைப் பற்றி அகநானூறு (அகநா.136) விளக்குகிறது. மணமகள் பல அணிகளை அணிந்திருந்தாள். மேகம் ஒலித்தது போல மண ஒலி ஒலித்தது. உறவினர் அனைவரும் கூடி மணமகளை மண மகனுக்கு மனைவியாகத் தந்தனர்.

இவ்விரண்டு திருமணங்களிலும் ஆரியச் சார்புடையது எதுவும் இல்லை. எரி வளர்த்தல் இல்லை. தீ வலம் வருதல் இல்லை. தட்சிணைப் பெற புரோகிதன் இல்லை. இவை முற்றும் தமிழர்க்கே உரிய திருமண முறைகளாகும்.

**திருமணக் கொடை**

கற்பெனப் படுவது கரணமொடு புணரக்
கொளற்குரி மரபின் கிழவன் கிழத்தியைக்
கொடைக்குறி மரபினோர் கொடுப்பக்கொள் வதுவே

(தொல்.கற்.1)

எனத் தொல்காப்பியர் கற்பு வாழ்க்கையில் திருமணம் என்பது ஒரு முக்கியமான நிகழ்வாகக் கருதப்படுகின்றது. திருமணம் நடைபெறும் பொழுது ஆண்கள் கொடை கொடுத்துப் பெண்ணைத் திருமணம் செய்துகொள்ளும் வழக்கம் இருந்துள்ளது படிப்படியாக மாறி இன்று திருமணத்திற்குச் சமூகத்தில் பெண் கொடை கொடுக்கவேண்டிய சூழல்

உருவாகியுள்ளது. பெரியோர் பெண்கேட்டுப் போதல், பெண்மறுத்தல் இவ்வாறு பெண் ஆண் திருமண களவு கற்பு வாழ்க்கை ஒரு வரன்முறைக்குள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது என்பதனைப் பழந்தமிழ் இலக்கியங்கள் இலக்கணங்கள் வழியாக மிக விரிவாகக் காணலாம்.

**உறவுச்சடங்கு**

திருமணச்சடங்கின் பொருட்டு இருவேறுபட்ட பாலினரும் சமூகரீதியாக இணைந்து கணவன், மனைவி என்ற உறவு நிலையை அடைந்தனர். இவ்விருவரையும் சமூகத்தில் ஏற்கும் பொருட்டு இல்லற வாழ்வில் இணைய திருமணச்சடங்கு முடிந்த அன்றிரவே ஓர் அறையில் சடங்கு ரீதியாக கூட்டுவிக்கின்றனர். இதனை, பாலுறவின் அடித்தளத்தில் கட்டப்பெறும் திருமணக் கட்டுப்பாட்டிற்கான காரணங்களை,

1. இனப்பெருக்கத்திற்காக, 2. உயிரின இயக்கத்தை இடையறாது தொடர்ந்து வாழ்விக்கச் செய்வதற்காக, 3. அன்பு வெளிப்பாட்டிற்குரியதாக என்று திறனாய்வாளர் கூறுவது குறிப்பிடத்தக்கது (சு.முத்து இலக்குமி 1992:243). இத்தகு சடங்கை,

> கரணத்தின் அமைந்து முடிந்த காலை
> நெஞ்சுதளை அவிழ்ந்த புணர்ச்சிக் கண்ணும் (தொல்.1092)

என்று தொல்காப்பிய நூற்பாவும்,

> குரவரிற் புணர்ச்சி வாயிலிற் கூட்டமென்
> றிருவகைத் தாகுங் கற்பிற் புணர்ச்சி (அ.பொ.வி.56)

என்று நம்பி அகப்பொருள் நூற்பாவும் குறிப்பிடுகிறது.

**சிலம்புகழீஇச் சடங்கு**

சிலம்பு என்னும் அணி சங்ககால மகளிர் அணியும் அணிமணிகளுள் ஒன்றாகும். இவ்வணி சங்ககாலத்தில் மகளிர்க்கு சிறுபருவத்திலேயே அணியப்பட்டமைக்கு

> சீர் கெழு வியன் நகர்ச் சிலம்பு நக இயலி (அகநானூறு - 219)

என்ற பாடல் சான்று பகர்கிறது. இதன் பொருட்டு பாலுண் பருவத்துச் சிலம்பு இடும் வழக்கம் இருந்தது என்பதை அறியலாம் என்பர் ந.சுப்புரெட்டியார் (1981:218). இவ்வாறு அணியப்பட்ட சிலம்பு *திருமணத்திற்கு மாலை யணிய விலைதந்தான் மாதர்நின் கால் சிலம்பு கழற்றுவான் சால அதிரலங் கண்ணி நீ அன்பனெற் கன்டன்* (பரி.20:79-81)

**இருதார மணம்**

இருதாரமணம் குறித்த வெளிப்பாடு தொடக்ககாலச் சமூகத்தில் இருதார மணவழக்கம் என்பது ஆண்வழிச் சமூகத்தின் பொருட்டுத் தோற்றம் பெற்றமையை,

பின்முறை ஆக்கியபெரும் பொருள் வதுவைத்
தொன்முறை மனைவி எதிர்ப்பாடாயினும்
மின்னிழைப் புதல்வனை வாயில் கொண்டு புகினும்

(தொல்.1118)

என்ற நூற்பா வழி தொல்காப்பிய குறிப்பிடுகிறார். இத்தகு மணம் முதல் மனைவிக்கு குழந்தைப்பேறு வாய்க்கப் பெறாத சூழலில் ஏற்பட்டமையைக் காட்டுகிறது. தொல்காப்பியம் பலதார மணக்குடும்பத்தைக் காட்டுகிறது. 'தொன்முறை மனைவி' என முதல் மனைவியும், 'பின்முறை வதுவை' என இரண்டாம் மனைவியும் சுட்டப் பெறுகின்றனர். மகப்பேறு வேண்டி இரண்டாம் மனைவியை மணந்து வாழும் நிலை சங்ககாலத்தில் ‘பலதார மணக்குடும்பம்' (Polygynous Family) ஏற்படக் காரணமாக இருந்துள்ளது. அதனாலேயே இது 'மகப்பேறு மணம்' என்று கருதப்பெற்றது. முதல் மனைவிக்குக் குழந்தை இல்லாவிட்டால் தனது தகுதிக்கேற்ற மற்றொரு பெண்ணை மகப்பேற்றிற்காக இன்னொரு திருமணம் செய்வதை முதல் மனைவி மகிழ்வுடன் ஏற்றுக் கொண்டதைத் தொல்காப்பியம் (பொருள்.172,கற்.31-33), ஐங்குறுநூறு வழி அறியமுடிகிறது (பக்தவத்சலபாரதி 2014:362).

**திருமண வகைகள்**

பண்டைத் தமிழர் வாழ்வில் திருமணம் என்பது மரபுசார் சடங்கியல் ஆகும். மனமொத்த தலைவனையும் தலைவியையும் கூட்டுவிக்கின்ற (இணைத்து வைக்கின்ற) ஒரு சடங்காகும். இச்சடங்கு சங்ககால இனக்குழுச் சமூகம் தொடங்கி இக்காலச் சமூகம் வரை பல்வேறு நிலைப்பாடுகளில் இயங்கி வருகின்றன.

1. மரபுசார் மணம் - திருமணம் குறித்த கருத்தாக்கத்தை நம் முன்னோர்கள் வகுத்த வழி அனைவரும் அறியும் பொருட்டு நிகழ்த்துவது ஒருவகை மரபு. ஒரு சடங்கிற்குள் கட்டமைத்து நிகழ்த்துவது. இதையே தொல்காப்பிம் கற்பு மணம் என்கிறது. கற்பெனப்படுவது கரணமோடு புணர (தொல்.1088), அறத்தோடு நிற்றல் வழி நிகழ்த்தப்படுவது.

கற்பெனப்படுவது களவின் வழித்தே என இறையனார் அகப்பொருள் நூற்பா நவில்கின்றது. பரிசம் / உறுதிசெய்தல், தாலி கட்டும் மணச்சடங்கு, முதல் நாள் நிகழ்வு என்னும் நிகழ்வுகள் மரபு மணத்தின் சிறப்புகளாகும்.

2. உடன்போக்கு மணம் – களவு வெளிப்பட்டுத் திருமணம் நடப்பது. மணமக்கள் ஒருவரை ஒருவர் புரிந்து காதலர்களாகி மணம் புரிய எண்ணும் போது பெற்றோர் சம்மதிக்காத நிலையில் மணமக்கள் இருவரும் வெளியில் சென்று திருமணம் செய்துகொள்ளுதல். கொடுப்போர் இன்றியும் கரணம் உண்டே (தொல்.1089)
3. மடல் மணம் – தலைவியைத் திருமணம் செய்யப் பெற்றோர் மற்றும் தலைவியின் ஒப்புதல் பெறுவதற்காக மடல் ஏறி ஒப்புதல் பெற முயலுதல் எனத் திருமணத்தை வகைப்படுத்தலாம்.

தொடக்ககாலத் திருமணத்தை இருநிலைக்குள் அடக்குவர் தொல்காப்பியர். உடன்போக்கின் மாற்றுநிலை மடல் மணம். மடல்மா ஊர்ந்து மாலை சூடி (நற்.337) மடலேறுவதால் தலைவனுக்கு ஏற்பட்ட நிலைமாற்றம் கண்டு தலைவியின் பெற்றோர் அஞ்சி தலைவனுக்குத் தலைவியைக் கொடுத்தமை மடல் மணம் ஆகும்.

வெளிப்பட வரைதல் படாமை வரைதல் என்று
ஆயிரண்டென்ப வரைதல் ஆறே (தொல்.1086)

என்ற நூற்பா திருமணத்திற்கான அணுகுமுறையை முன்வைக்கின்றது.

**தமிழர் தனித்துவம்**

தமிழர் திருமணமுறை தனித்துவமானது என்பதை அறிய வடவர் திருமண முறையை அறியவேண்டியது அவசியம். வடவர் திருமணமுறையை பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம், காந்தருவம், அசுரம், இராக்கதம், பைசாசம் என எட்டு வகையாகக் கூறுகின்றனர். இவர்களின் மணமுறையில் மனத்தால் ஒன்றுபட்டு மணம் நிகழ்ந்தமையை அறியமுடியவில்லை. ஆனால், தமிழர்களுக்கு மணம் என்பது தாமே மனத்தால் ஒன்றுபட்டும் அல்லது பெற்றோர் பொருட்டு மனம் ஒன்றுபட்டும் மணம் செய்யும் மரபுமுறை இருந்ததைத் தொல்காப்பியம் காட்டுகின்றது. வடவர் திருமணமுறை ஆனை முன்னிறுத்திய திருமணமாகவும் தமிழர் திருமணமுறை பெண்ணை முன்னிறுத்தும் முறையாக உள்ளது. மன்றல் (கலி.141) என்ற சொல்லிற்கு மன்றின் கண்ணே தன்னை உள்ளுவித்தவள் என்று உரை கூறுவார் பொ.வே. சோமசுந்தரனார். வதுவை, கரணம், மன்றல், மணம் என்னும் சொற்கள் பல சங்கப் பாக்களில் இடம்பெற்றுள்ளன.

சங்ககாலத் திருமணச் சடங்கு என்பது இனக்குழுச் சமூகத்தின் தொடக்கநிலையைப் பிரதிபலிக்கிறது. இஃது அக்கால மக்களின் ஒழுங்குமுறையை முன் வைக்கிறது. இச்சடங்கு காலப்போக்கில் பல மாற்றங்களைக் கண்டு இன்று பல்வேறுபட்ட சமூக விதிகளுக்குக் கட்டுண்டு நிகழ்கிறது. ஆனாலும் தொடக்ககால வாழ்வியல் நெறிகளின் எச்சங்களை மையமிட்டு நிகழ்கின்றன.

சங்க இலக்கியப் பரப்பில் திருமணச் சடங்கு குறித்த நிகழ்வுகளைப் பண்பாட்டு மானிடவியல் புரிதலில் அணுகும் போது தொடக்ககாலச் சமூகப் பண்பாடு வெளிப்படுகிறது. ஆணும், பெண்ணும் தொடக்க காலத்தில் வரன்முறையற்றுக் கூடியமையால் அக்காலச் சமூகத்தில் பொய்யும் வழுவும் மிகுதி ஆயின. இவற்றை நெறிப்படுத்தும் நோக்கில் திருமணச் சடங்கு தோற்றம் பெற்றுள்ளது. இச்சடங்கின் வழி ஆண், பெண் என்ற எதிரெதிர் பாலினத்தர் கணவன் மனைவி என்ற புதியதொரு உறவுமுறையில் சமூக ஏற்பைப் பெற்றுள்ளனர். ஆரியரின் எண்வகை மணத்துள் கந்தருவ மணமே தமிழர் மரபையொட்டி அமைந்துள்ளது. இருப்பினும் அங்கு தமிழர்க்குரிய தனிமரபு வெளிக் கொணரப்படுகிறது.

சங்க இலக்கியத்துள் நிகழும் திருமணச் சடங்கு மூன்றுவித இயங்கு தளங்களில் அமைகிறது. மரபுசார் திருமணத்தின் வழி பண்டையச் சமூகத்தின் ஒழுங்கு முறையைக் காணமுடிகிறது. இதன்வழி பரிசச் சடங்குக் குறித்த நிலையும் அதன் மாறுபட்டத்

தன்மையையும் வெளிப்படுகிறது. பண்டைக் காலத்திலே திருமணச் சடங்கின் பொருட்டு பொருத்தம் பார்த்தல் மரபு இருந்தமையைக் காண்கிறோம்.

மணச்சடங்கு என்ற கருத்தாக்கத்தில் மகளிர்க்கு நிலை மாற்றத்தை உணர்த்தும் நீராட்டுச்சடங்கு, கூந்தலில் மலர் சூட்டல், தாலி(இழை) அணிதல் ஆகியவை நிகழ்த்தப் படுகின்றன. இவ்வகையில் தாலி குறித்த கருத்தாக்கம் சங்ககாலத்தில் வெளிப்பட மொழியாவிடினும், குறிப்பால் உணர்த்தப்பட்டுள்ளது. இந்நிலையில் தாலி (இழையணி) அணிந்த வழக்கம் சங்ககாலத்தில் உண்டு. திருமணம் நிகழ்பொழுது தேர்தல், மணநிகழ்வின் அடையாளக் குறியீடு ஆகியவற்றில் சங்ககாலச் சமூக நுட்பங்கள் அமைந்துள்ளன. திருமணத்தின் பொருட்டு வழங்கப்பட்ட விருந்துண் மரபில் அக்காலச் சமூகக் கருத்தாக்கம் புலப்படுகிறது.

தொடக்ககால வரன்முறையற்ற புணர்ச்சியைச் சடங்கு ரீதியாக வரன்முறைப்படுத்தி அதன் பொருட்டு மனித இனத்தின் வளமையை முன்னிறுத்தியமையைப் புணர்ச்சிச் சடங்கின்வழி எடுத்துரைக்கப்பட்டுள்ளது. உடன்போக்கு மணம் அக்காலத்தில் இருந்த சமூக சுதந்திரத்தையும் இவ்வகை மணம் அன்று சடங்கு ரீதியாக சமூக ஏற்புப் பெற்றமையும் காணமுடிகிறது. கற்பு மணத்திற்குரிய சிலம்புகழீஇ வழக்கம் கொள்முறை மணத்தில் எங்கும் இடம்பெறாது. உடன்போக்கு மணத்திலே முழுபிரதிபலிப்பைக் காட்டியுள்ளது. இதன் பொருட்டு மகளிரின் இருவித அடையாளக் குறியீடுகள் வெளிக் கொணரப்பட்டுள்ளன. இச்சடங்கு சங்ககாலச் சமூகத்திற்குரிய தனி ஒரு மரபாகும்.

இவ்வாறு தமிழரின் தனித்த மரபாகத் திருமணச்சடங்குகள் உள்ளன என்பதனை நம் சங்கப் பாக்கள் வழி அறியமுடிகின்றது. மரபுகள் என்றென்றும் மறக்கப்படாமல் போற்றிப் பாதுகாப்பதுடன் மரபு மீறாமல் நாமும் அத்தகைய சடங்குகளைப் பின்பற்றி வாழ்தல் மரபு காக்கும் முறையாகும்.

**துணைநூற்பட்டியல்**


குறுந்தொகை மூலமும் உரையும், சாமிநாதையர், உ.வே. (உ.ஆ.). 2000, சென்னை: டாக்டர் உ.வே.சாமி. நாதையர் நூல்நிலையம்.

குறுந்தொகை விளக்கம், இராகவையங்கார், இரா.(உஆ). 1993. அண்ணாமலை நகர்: அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

குறுந்தொகை, அறவேந்தன், இரா. 2016., சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.

குறுந்தொகை, சோமசுந்தரனார், பொ.வே. (உஆ.). 1965. சென்னை: திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற் பதிப்புக்கழகம்.

சங்ககாலச் சடங்குகள், ஞானேஸ்வரன். செ., , உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், 2021

சோமசுந்தரனார், பொ.வே. (இ.ஆ.). 1962. நற்றிணை, நானூறு, சென்னை: திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.

பத்துப்பாட்டு மூலமும் உரையும், சோமசுந்தரனார், பொ.வே. (உஆ.). 1966., சென்னை: திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம்.

பத்துப்பாட்டு மூலமும் நச்சினார்க்கினியருரையும், சாமிநாதையர், உ.வே. (தொ.ஆ). 1961. தஞ்சாவூர்: தமிழ்ப்பல்கலைக்கழகம்.

பரிபாடல் மூலமும் உரையும், சோமசுந்தரனார், பொ.வே. (உ.ஆ.). 1964. சென்னை: திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம்.

புறநானூறு மூலமும் உரையும், சாமிநாதையர், உ.வே. (தொ.ஆ.), 1963. தஞ்சாவூர்: தமிழ்ப் பல்கலைக்கழகம்.